Registered At The G. P. O Colombo As A Newspaper.

திராவிடன்

பதிப்பாசிரியர்: பூதிநாதையரவர்கள்

THE DRAVIDAN.

A Monthly Newspaper.

"சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி."

சந்தா விளம்பரம்.

தபாற்செலவின்றி வருஷம் ஒன்றுக்கு ரூ. 1-00
தபாற்செலவு உட்பட ,, ,, ரூ. 1 25
மலாய்நாட்டிற்கு ,, ,, ரூ. 2-50
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்
தனிப்பிரதி 10 சதம்.
முற்பணமாகவே அனுப்பவேண்டியது.

விளம்பர விகிதம்.

1 கலம் முதன்முறை	ரூ. 4 50
¾ ,, ,,	ரூ. 3 00
½ ,, ,,	ரூ. 2 50
¼ ,, ,,	ரூ. 1 50

அடுத்தமுறைகளில் ½ வாசி
சில்லறை விளம்பரங்களுக்கு ரூபாத்தொகை
முற்காசு கட்டவேண்டும்

புத்தகம்—3. { யாழ்ப்பாணம்-சுன்னாகம்:-சுக்கிலவரு ஆடிமீ சுஉ (1929 ஜூலை 21) ஞாயிற்றுக்கிழமை. } இலக்கம்—3.

உ

கடவுள்துணை.

அங்கிங்கெனாதபடியெங்கும்பிரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளோடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்
யகிலாண்டகோடியெல்லாந் [குளே
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமலின்றதெதுசமயகோடிகளே
தந்தெய்வமெந்தெய்வமென்று [லாந்
எங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்கா
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமாய்
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெதுவது
கருத்துக்கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுருவெளியதாகவும்
கருதியஞ்சலிசெய்குவாம்.

இருகொம்புகள் முளைத்த குழந்தை.

சென்றமீ 15உ மேல்மீனுக்கருகாமையில் சதபியான் என்ற குககிராமத்தில் 27 வயதுடைய மாப்பியு என்ற பாமிய மாது இருகொம்புகளுடைய குழந்தை ஒன்றைப்பிரசவித்தனளாம். பிறந்த குழந்தையின் தலை மிகப் பெரியதாம். 7 மாதக்குழந்தையைப்போல் உருண்டு திரண்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இக்குழந்தையைத் தாயின் பிரசவத்திலிருந்து வெளியே எடுப்பதில் அதிகசிரமம் ஏற்பட்டமையால் குழந்தையின் அங்கங்கள் சில சுழிக்கப்பட்டும் வால் பூதத்திற்கிருப்பதுபோலவும் இருக்கிறதாம். இத்துடன் இருபக்கங்களிலும் இரண்டுகொம்புகள் காணப்படுகின்றனவாம். மூக்குக்கும் வாய்க்கும் ஓரே துவாரந்தான் உண்டாம். குழந்தை பெண் குழந்தை தாய் சுகமேயிருந்து வருகிறாள்.

இந்தமீ கூடிய சட்டநிருபணசபைக் கூட்டத்தில் இராசாங்கத தனாதிகாரி இலங்கையில் பொருளைப்பெருகச் முட்டின்றி அரசியலை நடத்துவதற்கு ஆக வேணடிய பொருளைச் சேகரித்ததற்காக இலங்கையில் இறக்குமதிபண்ணப்படும் பொருள்களின் நீர்வையை இருபதிலொருபங்கு ஏற்றவேண்டுமென்ற ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தார் இப்பிரேரணைக்குக் கௌரவப் பிரதிநிதிகள ஒருப்படவில்லை. பின் சமமதம் எடுக்கப்பட்டது. அதினும் நீர்வையை ஏற்ற வேண்டாமெனபதற்கு 17 வோட்டும், நீர்வைக்காக 12 வோட்டும் எடுத்தனர். பினனப்படியும் நீர்வையை அரசினர் ஏற்றிவிட்டனர். சமமதமில்லாத பிரதிநிதிகள மண்டபத்தை விட்டு வெளியேறினராம். இன்னும் புதியபிரதிநிதிகளுக்காகச் சிலர் முற்பட்டு நிற்கின்றனர். இவர்களையுந் தெரிந்தனுப்பிவைப்பதே புத்தியெனநினைக்கின்றோம்.

இறந்தவரை எழுப்புதல்.

அமெரிக்கா நியூயார்க்கில் பெரிய பண்டிதரான ஜான் கென்னத் கௌஸ் என்பவர் தமது புதல்வன் ஒருமோட்டார் விபத்தில் இறந்து இரண்டுமணிநேரங்கழித்து அவனுக்குப் புத்துயிரளித்து சில நிமிஷநேரம் அவன் உயிரோடிருக்குமாறு செய்தார். செத்தபின் புத்துயிரளிப்பதற்கு ஏதேனும் வழிதேடுதலே எனது வாழ்நாள் வேலையின் நோக்கம் அதுபற்றிச் சென்ற இருபது ஆண்டுகளுக்கு மேலாக நான் ஆராய்ச்செய்துவருகிறேன் என்று அவர் சொல்லுகிறார். ஒருவன் இறந்து அவனுடைய முக்கிய உறுப்புக்கள் சீர்கெடாமலிருந்தால் அவைகளுக்கு என் புதுவாழ்வு அளிக்கலாகாதெனறு அவர் நினைக்கிறார். இதுவரை செத்துப்போனசிலருக்குப் புத்துயிரளித்துச் சில நிமிஷங்கள்வரை உயிரோடிருக்குமாறு செய்திருக்கிறேன். அவ்வாறு நெடுங்காலம் வாழுமாறு செய்யவேண்டுமென்பது எனது விருப்பம். சாஸதிர ஆராச்சியில் அது முடியுமென்று அவர் கூறுகிறார்.

தேகத்தை வலிவுபடுத்தும் பணிகாரம்.

ஜப்பான் தேசத்துத் தலைநகரமாகிய டோகியோவில் கடைத்தெருவிலுள்ள ஹோட்டலில் பாம்புகள் தவளைகள் முதலியவற்றைக் கொண்டு பணிகாரங்கள் செய்து விற்கப்படுகின்றன. இந்த ஹோட்டலில் இந்தப்பண்டங்களை ருசியுடன தயாரிப்பதில் பேர்பெற்றவர்களாம். பாம்புணவு காம்புத் தளர்ச்சியைப் போக்கி, தேகத்தை வலிவுபடுத்தும் என்று இந்த ஹோட்டல் சுவரொன்றில் விளம்பரஞ் செய்திருக்கிறார்களாம்.

சூரிய நமஸ்காரம்.

ஜேர்மனியில் சூரியஸ்நானக் கொள்கையை அனுஷ்டிப்போர் தொகை சுமார் முப்பது லட்சத்திற்கு மேல் இருக்குமாம். அவர்கள் திறந்த வெளியில் எவ்வித உடையுமின்றி நிர்வாணமாகப் பரிதியின் ஒளியில் முழுகுகிறார்கள். இங்கிலாந்திலும் பிரான்சிலும் கூட இந்தக் கூட்டத்தார் தோன்றியிருக்கிறார்கள். சூரிய நமஸ்காரத்தை ஆதியில் தோற்றுவித்தது தமிழ்நாடே. ஆனால் இங்குள்ள நாகரீகமனிதர்கள் சட்டைமேலே சட்டையாகப் போட்டுக்கொண்டு உடம்பிற்காற்றும் ஒளியும் படாமலும் செய்து சுகத்தைக் கெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

குழந்தைப் புத்தர்.

மங்கோலியாவில் பிறந்திருக்கிற இரண்டு வயது குழந்தை ஒன்றைப் புத்தரின் அவதாரமென்று கூறி அங்குள்ள பௌத்தர்கள் பெரிதும்போற்றிவருகிறார்களாம். பதினாயிரக்கணக்கானவர்கள இந்தக் குழந்தைப் புத்தரைக் காத்துக் கொண்டிருக்கிறார்களாம். அக்குழந்தையைக் கண்கண்ட கடவுளாகவே அவர்கள் போற்றுகிறார்கள் தீபேத்தின் காலஞ்சென்ற தலைலாமாவின் ஆவி இக்குழந்தையிடம் இறங்கியிருக்கிறதாம். அவர் இறக்கும்பொழுது குறித்த அடையாளமுள்ள இந்தக்குழந்தையை நாடெங்கும் நாலுமாதமவரை தேடிக்கண்டுபிடித்தார்களாம்.

இயற்கை விநோதம்.

பாரதத்தில் சிகண்டியென்பான் பெண்ணாயிருந்து ஆணாமாறியதாகக்கதை. அமெரிக்காவில் பாலடிமோர் என்னுமிடத்தில் ஒருஸ்திரீதனது பெண்ணுக்குரிய இயற்கைகள் மறைந்து ஆணாக மாறி வருவதைக்கண்டு அஞ்சி டாகடர் ரிடில் என்பவரிடம் அறிவித்தார் அவர் சில இயற்கை அமைப்பு நாடிகளில் புறையோடி அதிகச்சத்துப் பெருக்கினால் அவ்விதமாயிற்றென்று கண்டு அதற்கு வேண்டிய வைத்தியஞ் செய்ய அவள மீண்டும் பெண் ஆனாளாம். இத்தகைய மாறுதல்கள் செயது கொள்ளலாமென்றும் மனிதர்களுக்கு எவ்வாறு செய்வதென்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாவிட்டாலும் விலங்குகளில் தாம் அவ்வாறு செய்திருக்கிறதாகவும் அந்த வைத்தியர் கூறுகிறார்.

நவரசம்.

"புண்ணிய கர்மம்" பாபகர்மம் என இரண்டுவகைப்படும். சில வாக்காலும் சில காயத்தாலும் சில மனதாலும் செய்யப்படுகின்றன எந்தக் காரியஞ் செய்தாலும் முதலில் மனதுக்கேதெரியவேண்டும். மனதுக்குத் தெரியாதென ஒன்றையும் மனிதர்கள் செய்வதில்லை சூக்ஷமமான மனதில் தோன்றும் எண்ணங்களை யார் அறிய முடியும்? மனதையே சுத்தப்படுத்தினால் யாவும் புண்ணியகரமாயிருக்கும். சுத்த மனதினர் பேசும் வார்த்தைகள் இனிமையாயிருக்கும்; செய்யும் காரியங்கள் சந்தோஷத்தைவிளைவிக்கும்.

* * *

கர்மங்கள் செய்வதற்கென் றேற்பட்ட இத்தேகம் நித்தியமான சுகத்தைத் தாராது. உலகத்தில் எது பிரகாசப்படுகின்றதோ அது அழிந்து போகும். தோற்றம் உடையது எதுவும் அழிந்து போகும். இவ்வுண்மையை ஆராய்ந்து என்றும் அழியாத ஆத்மாவின் குறிப்பை யறிந்து அதனைத் தெரிந்து கொள்ளவேண்டும். இப்படி நித்திய வஸ்துவை யறிவதையே ஞானமென்கிறோம்.

* * *

நம்மைச் சுத்தமாக்கிப் பேரின்பமார்க்கத்தை யடையத் நூண்டுவது பக்தரின் திவ்விய சரிதைகளேயென்று கூறலாம். எத்தனையோ பக்தர்கள் இவ்வுலகத்திற் பிறந்து சிவபிரானைத் துதித்து நற்கதியடைந்தார்கள் அவர்களின் சரித்திரங்களைப் படித்துச் சந்தோஷமுறுவதற்குக் காலம் வேண்டும். காலமோ நம்மை அறியாது சென்றுகொண்டிருக்கிறது. மனதின் தன்மை ஒருநிமிஷமேனும் சும்மாவிராமல் சலித்துக்கொண்டிருப்பதாகையால் அதை நற்கருமங்களிற் பதியச் செய்யாவிட்டால், அது தீய காரியங்களில் பிரவேசித்துவிடும். ஆகையால் பரமாத்மாக்களின் சரிதைகளை ஆராதித்துக் கடவுளைத் தேடவேண்டும்

* * *

மனிதசீவியத்தில் எவனும் நன்மையுடையவனாகவாழ்ந்து வரவேண்டுமென்பதே கடவுளாரின் நியதியாம். மக்களெவரும் கர்மயோகபலாபலனின்படியே தம் வாழ்நாளின் கணக்கை முடிக்கிறார்கள். நம்மை ஆளும் அரசினரும் ஏற்படுத்தும் சட்டதிட்டங்கள் தம்பிரசைகள் எவனும் தீமையெனப்படும் குற்றத்தில் நின்றும் விலத்தி நன்மையுடன் வாழுவதற்கெனச் சொல்லப்படுகிறது. தீமையுடைய மதுவேட்கையரின் பரபரப்பைக் குறித்து மாமேறிகள் சுறுசுறுப்பாய் வேலைசெய்ய மதுசோதகர்கள் பெருமுயற்சிகொண்டு திரியவேண்டியிருக்கிறது. இதுவும் யோகபலன்தான்.

* * *

மக்களெனக்குறிப்பிடும் ஒருவன் தாம் புரிந்துவரும் எவ்வித செயலேயாவது ஊழியத்தையாவது தன்னுள்ளத்தில் மகிழ்ச்சியுடன் ஏற்றுச் சந்தோசிக்கிறான். ஊழியத்தின் கௌரவம் முதலிய நற்கெய்கைகள் மறைந்துவிடுகின்றன. பின்னும் தம் அரிய தொண்டைப்புரியாதிருப்பதுவே உத்தமமான கொள்கை.

* * *

நான் யார் என்றகேள்விதான் முதற்கேள்வி. நான் சரீரமெனில் அச்சரீரத்திற்கு நித்திரைக்காலத்தில் உணர்ச்சியெங்கேயெனப்படுகிறது? சொர்பனம் முதலியவற்றைக் கண்ட மறுநாள் சொல்லுகிறோம், அதை எப்படிச்சொல்லுகிறோம். சொர்ப்பனங் காணும்போது நான் எங்கேபோனேன், என்னுடைய கை கால்கள் ஏதும் அசைவற்றிருக்கின்றன. ஏதோ ஒரு சூக்ஷமப்பொருள் மாத்திரம் தனியாக இருந்து நாம் கண்ட சொற்பனத்தை மறுநாட்காலமே தெரிவிக்கிறது. அப்பொருளின் மகத்துவத்தைப் பற்றி நாம் விசாரித்தறிவதே வேதாந்த சாஸ்திரமாகும். பிரக்ஞை நவறிப்போகும்போது நம்முடையதேகம் கட்டைபோலிருந்து பிரயோசனப்படுகிறதில்லை. ஆதலின் தேகத்தை நான் என்று எப்படிச் சொல்லிக்கொள்ளலாம்.

புலால் உணவின் கேடுகள்.

(லோகோபகாரியில் எடுக்கப்பட்டது.)

அன்பர்களும் அறிஞர்களுங்
கூறுவதைக் கேளுங்கள்.

1. மனிதன் மாமிசம் உண்பது இயற்கைக்கு விரோதமானது. மனிதனுடைய சரீர அமைப்பு மாமிசம் உண்பதற்குப் பொருத்தமானதல்ல, மனிதனுடைய சரீர அமைப்பு மனிதக் குரங்கினுடைய சரீர அமைப்போடு ஒத்திருக்கின்றது. மனிதக்குரங்குகள் இயற்கையில் பழங்களையே புசிக்கின்றனவென்று லின்னியஸ் கூறுகிறார்.

மனிதன் எல்லா அம்சங்களிலும் சாகபட்சணிகளையே ஒத்திருக்கிறான். ஒரு விதத்திலும் மாமிசபட்சணிகளோடு ஒத்தில்லை என்று புரோபஸர்பாரன்குவியர் கூறுகிறார்.

மனிதனுடைய பற்கள் மாமிச பட்சணிகளின் பற்களோடு கொஞ்சமும் ஒத்தனவாக இல்லையென்று புரோபஸர் வில்லியம் ஸ்ரான்ஸ் E. R S. கூறுகிறார்.

மனிதன் சாகபட்சணியே என்பதை அவனுடைய பற்களும் குடலும் முற்றும் நிச்சயமாக நிரூபிக்கின்றன என்று டாக்டர் E. L. பௌச்சி எழுதுகிறார்.

மனிதன் இயற்கையிலே சாகபட்சணி என்னும் கொள்கை அவனுடைய பற்கள் ஜீரணக்கருவிகள் தோல் அங்கங்களின் அமைப்பு ஆகியவற்றால் தெளியக் கிடக்கின்றது என்று புரோபஸர் சர்சார்லஸ்பெல் எழுதுகிறார்.

2. மாமிசஉணவு மனிதனுக்கு அவசியமல்ல

மனிதன் உயிர்வாழவேண்டியதற்கு அவசியமான எல்லா உணவுப் பொருள்களும் சாகபதார்த்தங்களிலேயே மிகுதியாகவும் சுத்தமாகவும் கிடைக்கின்றன. எந்தப்பிராணியினுடைய மாமிசத்தை மனிதன் உண்கிறானோ அந்தப்பிராணி தன்னுடைய ஆகாரத்தைச் சாகபதார்த்தங்களினின்றும பெறுகின்றது.

3. மாமிச ஆகாரம் கொடிய வியாதிகளுக்குக் காரணமாயிருக்கின்றது. மாமிசம் கொடிய வியாதிகளான பிளவை சுரம், க்ஷயரோகம், குஷ்டம், வாதரோகம், பாரிசவாயு, குடல்புழுக்கள் முதலியவற்றிற்குக் காரணமாயிருக்கின்றது. என்றும நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதுபேர்களைக் கொல்கின்ற வியாதிகளுக்கு முக்கியகாரணங்கள் மாமிசமும என்பதில் சிறிதுஞ் சந்தேகமில்லையென்றும் டாக்டர் ஜோஷையா ஒல்ட்பீல்ட் கூறுகின்றார்.

மாமிசம் உண்கிறவனுடைய இருதயத்தைவிட ஒருநாளைக்கு 20,000 தடவைகள் அதிகமாக அடிப்பதாகவும் மாமிசம் உண்கிறவனுடைய தேகம் சீக்கிரத்தில் தளர்ச்சியடைந்து மாணத்துக்கு ஆளாவதாகவும் ஜெ. ஹொரன் என்பவர் கூறுகிறார்

மாமிச உணவு சாகபதார்த்தத்தைவிட பத்துமடங்கு அதிக விலையுள்ளது என்று பிராம் வெல்பூத் தெரிவிக்கின்றார். ஒரு குடும்பத்திற்குப் பத்தணாவுக்குமாமிசம் வாங்கவேண்டியதானால் ஒரு அணாவுக்கு மரக்கறிவாங்கினால் போதுமானது. நம தேசத்தின் வறுமைக்கு முக்கியமான காரணங்களில் புலால் உண்பது ஒன்று புலால் உண்பதும் குடிப்பதும் ஒரு குடும்பத்தை அழித்துவிடும். மாமிசம் உண்கின்றவர்கள் அன்பற்றவர்கள் ஆகையால் அவர்கள் ஆன்மா உயர்ந்த பதவிக்குச் செல்லவே முடியாது ஆகையால் இன்றுமுதல் புலால் உண்பதை விட்டுவிடுங்கள்.

ஐக்கிய மலாய்நாட்டுச் சந்தாநேயர்களுக்கு.

ஐயா,

திராவிடன் பத்திரிகையின் இருவருஷங்களும் முடிந்து இப்பொழுது மூன்றாவது வருஷம் நடக்கின்றது. மூன்றுவருஷத்திய சந்தாப்பணத்தையும் அநேகர் அனுப்பாதிருக்கின்றனர். பணமின்றி எத்தொழிலும் நடைபெறாதென்பது யாவர்க்குந் தெரியும். இச்சிறிய பத்திரச் சிறுவன்மீது கிருபைவைத்து, சந்தாப்பணத்தை அனுப்பிவைக்கும்படி கேட்கின்றோம்.

இலங்கைச் சந்தாநேயர்களுக்கு.

ஐயா,

இதுவரைக்கும் திராவிடன் சந்தாப்பண மனுப்பாதவர்களுக்கு V. P. யில் அனுப்பிவருகின்றேம். சிலர் V. P. க்குப்பணம் கட்டாது திருப்பிவிட்டனர். இவர்களைப்பற்றிப்பின் குறிப்பிடுவோம். V. P. யைத் திருப்பிவிடுவதினால் வீணே நஷ்டமடையவேண்டியிருக்கிறது. ஆகையால் தயவுசெய்து மனியோடர் மூலமாகவேனும் போஸ்ரோடர் மூலமாகவேனும் பணத்தை அனுப்பிவைக்கும்படி கேட்கின்றோம். பணமனுப்பாது பத்திரிகை படித்தல் அழகல்லவே.

திராவிடன்.

சுன்னகம்:—சுக்கிலஞு
ஆடிமீ கூஉ ஞாயிற்றுக்கிழமை.

கணிணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க, புன்னின்றுபின்னோக்காச் சொல்.குறள்

கல்வி.

தீயகாரியங்கள் செய்பவர்களை அற்றினின்றுந் தடுக்கவேண்டுமாயின் முதலாவது அவர்களுக்குக் கல்வியறிவை ஊட்டவேண்டும். விளக்கமான அறிவும் பசிக்கு உணவும் இருக்குமாயின் சீவர்கள் தீமை பயப்பனவாகிய காரியத்தில் பிரவேசிக்கமாட்டார்கள்.

உதாரணமாக, இரண்யகர்ப்பபகவான் தமது புதல்வரான விராட்பகவானை உண்ண முயன்றாராயினும் வித்தையானது அவரது இருதயத்தில் இருந்து விளங்கியது. இரண்யகர்ப்பரே தாங்கள் தர்மத்தை நிலைநாட்டுதற்பொருட்டுத் தோன்றியுள்ளீர்கள். தாங்களே பசிப்பிணி தவிர்த்தற்பொருட்டு புத்திரபட்சணஞ் செய்யவிரும்புவீராயின் வேறுயார்தான் அறத்தைக் கைக்கொள்ளுவார்கள். தாங்கள் நினைத்தது மிகவும் தவறெனவிளக்க அதனினின்றும் நீங்கியதாக உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது. ஆகையால் மக்களெவரும் கல்வியறிவால் சிறந்திருப்பின் ஒழுக்கத்தால் மேம்படுவார்கள். கல்வி அறிவுடைய ஒருவனை எவ்விததீய காரியத்தில் முயலும்படி எத்துணை தூண்டினாலும் அவன் பிரவேசிக்கமாட்டான் ஒருவனது இம்மை மறுமை வாழ்வனைத்தும் கல்வியறிவிலேயே இருக்கின்றன "ஸ்திரீ சூத்திரநதீயதாம்" பெண்களுக்கும் சூத்திரர்களுக்கும் வேதத்தை அத்தியயனம் செய்துவையாதே என யாரோ ஒருவர் ஒரு காலத்தில் ஒரு வாக்கியத்தை எழுதிவைத்தார். அது அக்காலத்தில் அவருக்கும் அவர்போன்றார்க்கும் பொருத்தமாயிருந்தாலும், பின்னர் எவ்வளவோ கெடுதிகளைச் செய்துவிட்டது. அதனாலேயே தற்பொழுது தாழ்ந்தவர்களாகக் கருதப்படும் ஏனமக்கட்கு கல்வியறிவு குறைந்துவிட்டது. பெண்களும் கல்வியில் பிந்திவிட்டனர். பின்னர் தோன்றிய அவர்கள் சந்ததியார் தங்கட்குஊழியஞ் செய்தற்குரியராண பெண்மக்களும் தாழ்ந்தவர்களென்று கருதப்படும் ஏனமக்களும் கல்வியறிவு ஒழுக்கத்தாற் சிறந்தால் அவர்கள் நம்மை மதிக்கமாட்டார்கள். நாமே அவர்கட்கு ஊழியஞ்செய்யவேண்டுமெனக் கருதி அவர்கள் கற்றால் உடனே தண்டிக்க வேண்டுமென்றும் அவர்கள் வேதாகமங்களைக் கண்டால் கண்களைக்குத்தவேண்டுமென்றும் கேட்டால் செவிகளில் நாராசங் காச்சி ஊற்றவேண்டுமென்றும் அவர்கள் தவஞ்செய்தால் கொல்லவேண்டுமென்றும் அநியாய செய்திகளை நூல்களிற் புகுத்தி நூல்களின் பெருமைகளைக் குறைப்பாராயினர்.

அந்தோ! என்னபாவம்? பெண்களுக்கும் தாழ்ந்த ஏனழவகுப்பினர்க்கும் வேதவாக்கியங்களைச் சொல்லக்கூடாதாயின் யஜுர்வேதம் பிரஹ்தாரண்ய உபநிசத்தில் யாசஞவற்கிய முனிவர் கார்க்கி மைத்திரேயி என்னும் இரண்டுபெண்களுக்கும் வேதாத்தியயனஞ் செய்துவைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறே ஐக்வார் என்னுந் தழ்த்தப்பட்டவர் வேதத்தியானஞ் செய்திருந்ததாக வேதக்கதையே கூறுகிறது சில சுருதிகள் மனுஷன் மாத்திரத்திற்குக் கூறவேண்டும். மனிதசரீரமும் பரம்பொருளுணர்ச்சியை அடையவேண்டுமென்னும் ஆவலும் எவ்வுயிர்க்குள்ளோ எவ்வுயிர்க்கு மெய்ப்பொருளுணர்ச்சியைத் தரவேண்டுமெனக் கூறியுள்ளார். மெய்ப்பொருளுணர்ச்சிக்குக் காரணம் மகாவாக்கிய உபதேசங்களாகும். மகாவாக்கியங்களும் நான்கு மறைகளின் அந்தங்களில் கூறப்பட்டுள்ளன. ஆகவே மகாவாக்கியங்கூறுவதும் வேத அத்தியயனஞ் செய்துவைப்பதும் ஒன்றே. ஆதலால் பெண்களுக்கும் தாழ்ந்தவகுப்பார்களுக்கும் சொல்லக்கூடாதென்பது பெரும் பிழையாகின்றது. சிலர் தாழ்ந்தவகுப்பாருக்குக் கல்விவராதென்னும் கருத்தைந் திருககின்றனர். திருவள்ளுவர், நம்மாழ்வார், திருப்பாணாழ்வார், சோகாமீளர் முதலியோர் தாழ்ந்தவகுப்பிற்றோன்றியவராயிருந்தும் பேராசிரியராக விளங்கினர். ஆதலால் தாழ்ந்தவர்க்குக் கல்விவராதென்பதும் கற்கக்கூடாதென்பதும் தவறு. அவர்கள் நன்றாகக் கற்றால் மேல்வருணத்தவர்களிடத்தில் நடந்துகொள்ளவேண்டியவிதிகளை நன்கறிந்து அவ்வாறு நடப்பர்கள் நந்தனார் அவ்விதிகளை அறிந்திருந்ததனாலல்லவா அந்தணரது உத்தரவிற்குக் கீழ்ப்படிந்து நெடுநாளாகத் தில்லைக்குப் போகாமல் காத்திருந்தார்.

அன்பு.

அன்பு என்பது மக்கள் யாவரிடத்தும் இன்றியமையாது இருக்கவேண்டிய ஒரு பெருங் குணமாகும ஒரு பூக்தோட்டத்தில் சண்பகம், முல்லை, பிச்சி, இருவாட்சி, மந்தாரை முதலிய மணங் கமழும் பலநிறப் பூக்கள் நிறையப் பூத்திருந்தாலும், அழகும் நறிய மணமும பொருந்திய ரோஜா ஒன்று இல்லையேயானால் மலர் நிரம்பிய வனத்தை எவ்வாறும் நாம புகழ்ந்து பேசுவதற்கு முடியாமலிருக்கின்றனரவோ அதுபோலவே ஒருவரிடத்தில் பல சம்பத்துக்களிருந்தாலும் அன்பு மட்டும் அவரிட மில்லையானால் அவரை யாரும் மதித்துரைப்பது இல்லையாகும். அன்பானது வல்லென்றிருக்கும் நிலத்தை நன்கு வெட்டி உழுது உணவுக்கு வேண்டும் பயிர்களைப் பயிரிட்டு வளர்த்துக் கொள்ளும் உழவனைப்போல கல்லினும் வலிதாக இறுகியிருக்கும் மனத்தை இளகச்செய்து அருளு, வாய்மை, அடக்கம், பிறவுயிர்களுக்குத் தீங்குசெய்யாமை முதலிய நற்குணங்களைக் கிளரச்செய்கிறது. இன்னும் இவ்வன்பானது மக்கள் வாழ்க்கையில் முதன்மையுள்ளதும் சிறந்ததுமான மனைவியோடு கூடி வாழும் இல்லற வாழ்க்கைக்குத் தாயகமாக விருக்கிறது. இல்லறத்திற்குரிய வீடு வாசல் பொருள் பண்டம் தட்டு முட்டு முதலிய வீட்டுப் பொருள்கள் யாவையுந்தான் ஒருவன் பெற்றிருந்தாலும் அவைகளை வைத்துக் கையாளுந் தானும் தன் மனைவியுங் குறையாத அன்பைப் பொருந்தியிருந்தாற்றான் அவ்வில்வாழ்க்கை அழகுடன் நடைபெறும். அப்படியின்றி அவர்களிருவரும் மனக்கலப்பின்றி ஓயாமல் ஒருவரோடொருவர் சினந்து சண்டையிட்டுக்கொண்டிருந்தால் மேற்படி கூறிய தருமங்கள் யாவும் செய்ய முடியுமா? அச்சாணியின்றி வண்டி ஓடுவதுண்டா? ஆகையால் எதுவகையாலும் இவர்கள் மனமலுத்து முடிவில் தாங்கள் இயற்ற வேண்டிய அறங்களையெல்லாம் கைகெழுவிட்டு இம்மையிலும் இன்பத்தையிழந்து மறுமையிலுந் துன்பப்படுகிறார்கள்

கணவனும் மனைவியும் மேலடுக்குமாளிகையிலேயிருந்து விலையேறப்பெற்ற விதம் விதமான சேலைகளை யுடுத்தும் ஒய்யாரமான நகைகளை யணிந்தும் பாலொடு சோற்றைப் பரிவுடன் உண்டும் படுக்கைமீதே வாழ்ந்தாராயினும் அன்பு என்னும் ஒரு குணம் அவர்களிடத்து இல்லையாகுமானால் சந்திரனை இழந்த வானத்தைப்போலவே இவர்கள் வாழ்க்கையும் வாழ்ந்தவராவர். மண் சுவரு மின்றி ஓலையால் பின்னிய கொட்டிலில் தம் வாழ்க்கையை ஒருவர்க்கொருவர் அன்புடன் காலையிலிருந்து மாலைவரையும் கூலிவேலை செய்தாயினும் மனஞ் சலிக்கும்படி உழைத்தாயினும் அதனால் வந்தனகொண்டு கால்வயிறு அரைவயிறுமாகக் காலங்கடத்தித் தரையில் கித்திலை கொண்டெழும் ஏழைவாழ்க்கையை அவர்கள் வாழ்ந்தாராயினும் மனக்கலந்த அன்புடையவராயின் அவர்கள்தான் இம்மையிலும் மறுமையிலும் உண்மையான இன்பத்தைப் பெற்று இல்வாழ்க்கையின் பயனை அடைகிறார்கள்

இற்றைக்கு ஆயிரவருடங்களுக்குமுன் சோழதேசத்திலே காவிரிப்பூம்பட்டணத்திலே கரிகாற் பெருவளத்தான் என்ற அரசன் அரசு புரிந்துவரும் பொழுது, கடியலூரிலே உருத்திரங் கண்ணனார் என்ற ஒரு புலவனார் தன் அன்புள்ள மனைவியோடு இல்லறம் நடாத்தி வாழ்ந்துவந்தார் அவருக்கு வறுமையென்னும் நோய் வந்து சேர்ந்தது. எறும்புக்குக்கூட ஒரு அரிசி அவர் வீட்டிலில்லை என்செய்வார் புலவர்? தானும் தன் மனைவியும் பட்டினியிருந்து பலநாள் வருந்தினார் பசிப்பிணி அவர்களைப் பெரிதும் அலைத்தது. உணவில்லாமல் எத்தனைநாள் இருக்க முடியும? இனி உயிர் வாழ்வது முடியாதென்ற நிலைமை வந்துவிட்டது. ஒருநாள் அவர் தம் மனைவியை அருகில் அழைத்து "பெண்ணே! நம் பசியால் எத்தனை நாள் வருந்துவது? காவிரிப்பூம்பட்டினத்திலே யிருக்கும் மன்னர்பெருமானாகிய கரிகாற் பெருவளத்தானிடத்துக்குப் போய் நம்முடைய வறுமையைக் கூறிப் பொருள் வாங்கிக்கொண்டு விரைவில் வருகிறேன்; அதுவரையும் என் பிரிவைப் பொறுத்திரு" என்றார். அது கேட்டதும அவர் மனைவியார் தன் அன்புள்ள கணவர்பிரிவைச் சகியாதவராய் இடியொலி கேட்ட நாகப்போல் நடுங்கிக் கண்களிலிருந்து நீரைச் சிந்தி அழகிய கண்ணாடியைப்போல வழுவழுப்பும ஒளியும் உடைய கன்னத்தையும் ஆடையையும் நனைத்தழுதார். அதனைக் கண்ட புலவர்மனம் பதறி பல இனிய வசனங்களால் மனைவியை மகிழ்வித்து "அரசர் தான் ஆளும்வளமுள்ள பட்டினத்தையே எனக்கு முடிசூட்டித் தந்தாலும் நான் உன்னைப்பிரிந்து போவதில்லை" என்று தேனிலும், பாலிலும், தீங்கரும்பிலும் இனிக்கும் ஒரு பாட்டுப் பாடினார். அப்பாட்டுக்குத்தான் 'பட்டினப்பாலை' என்று பெயர், பாருங்கள்! பொல்லாத வறுமை கூட அன்புக்கு முன் தலைகாட்டாது உடைந்து ஓடுமானால் அதன் பெருமையை யாரே எடுத்துரைக்க வல்லார். இத்தகைய அன்புடையவர்கள் தான் வீட்டுலகத்தில் பெறும் இன்பங்களிலும் மேலான இன்பத்தை இவ்வுலக சீவியத்திலேயே பெறுகிறார்கள். நிற்க.

இதன் அடுத்தபடியாகவுள்ள துறவறத்தில் வாழும் துறவியின் நிலையைப் பார்ப்போம் அங்கும் இவ்வன்புதான் துணை புரிய வேண்டியதாகிறது. துறவியாவான் உலகத்துப் பொருள்களையெல்லாம் வெறுத்தாலும் கடவுளுடைய மோக்ஷ உலகத்தை வெறுக்கவில்லை மோக்ஷ உலகம் யாருக்கு இடந்தருகிறது? அன்புடன் கடவுளை நிதமும் நினைந்துருகும் அடியவருக்கல்லவா? அன்பில்லாது இயற்றும் வழிபாடுகள் அவ்விறைவரால் ஏற்கப்படுவதில்லை. அன்பென்னும் வலையிலேதான் அவரை அகப்படுத்தவேண்டும். அன்பில்லாதோர் தங்கள் வாழ்நாள் முழுக்கவும் பூவும் நீருமிட்டுப் போற்றிவரினும் அப்பெருமான் இரங்கினாரில்லை கண்ணப்பர் என்னும் வேடர் அன்பால் அகங்கரைந்து ஆறுநாளே வழிபாடு செய்தார். அவர் பூசைக்கு உவந்து சிவபெருமான் சிவமாந் தன்மைப் பெருவாழ்வை கல்கினார். அங்ஙனம் அருளுதற்குக் காரணம் அன்பன்றி வேறு யாது? நித்த மாயிரங் கொலைகளைச் செய்யும் அவ்வேடுவகுலத்தில் பிறந்த அந்த நாயனாரது கரைகடந்த அன்பை வியந்து மாணிக்க வாசகசுவாமிகள் தமது திருவாசகத்தில் "கண்ணப்பரை ஒத்த அன்பு என்னிடத்தில்லாமை கண்டும் என் அப்பன் என்னளவில் என்னையும் ஆட்கொண்டருளினார்" இதனால் துறவியும் தன் விருப்பத்தை அன்பு வாயிலாகவே நிறைவேற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. நீர் நிலையே இல்லாத மணற்பாங்கான பாலைவனத்திலே வற்றி உலர்ந்த ஒரு மரம் தளிர்த்தாலும் தளிர்க்கலாம்; அன்பில்லாதவாழ்க்கை பயனடைவது முடியாது.

ஸ்ரீ சாரதாதேவியின் அம்சமாகிய ஔவைப்பிராட்டியாரின் அற்புதசரிதை.

வண்ணைநகர் ஸ்ரீ க. வைத்தியலிங்கம்பிள்ளை அவர்கள் எழுதியது.

(முற்றொடர்.)

இங்ஙனம் திருவள்ளுவனாயனார் தன்னையின்ற இரு முதுகுரவர்களின் திருநாமங்களையும், தனது அபிதானத்தையுஞ் சாற்றி அடியேன் இப்போது, இத் திருக்குறளை மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்கள் ஏழுவர் முன்னிலையில் அரங்கேற்ற செல்கின்றேனென்னும் மாற்றத்தைச் செவிமடுத்த ஔவைப்பிராட்டியார் வள்ளுவரை விளித்து அனுச: அத் தமிழ்ச்சங்கத்திற்கு யானும் நின்னுடன் வருகின்றேனென்று இருவரும் கூடிச்செல்லுங்காலை, மறுகில் எதிரே போந்த "இடைக்காடர்" என்னும் கவிஞர் கண்ணுற்று அஞ்சலிசெய்து தொழவையும் கனிட்டரும் யாண்டுச் செல்கின்றீரென உசாவினர். அதைக்கேட்ட திருவள்ளுவனாயனார், எம்மால் குறள்வெண்பாவால்பாடப்பெற்ற இந்நூலை அரங்கேற்றத் தமிழ்ச் சங்கத்துக்குச் செல்கின்றோமென மொழிந்தனர். உடனே இடைக்காடர் தானுங் கூட வருகின்றேன் என்று சாற்ற, உமது வரவு நல்வரவாகுக என்று அவரையும் தங்களோடு ஒரு சோ அழைத்துக் கொண்டு, மதுரையம்பதியில் பொற்றாமரை வாவிக் கரையின் மருங்கில் சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மருங் குழுமியிலங்கிய மண்டபத்தை அண்மினர். இவர்களது வரவைக் கண்ட சங்கப் புலவர்கள் தங்கள் கல்விச் செருக்கால் மரியாதை புரியாது வானாவிருந்தனர். அதனைக் கண்ணுற்ற ஔவைப்பிராட்டியார் சங்கப் புலவரது உள்ளக்கிருக்கையை யொளிக்கக் ருதி, அன்னாரை விரிதது செந்தமிழ்க் கடலை நிலகண்டுணர்ந்த புலவீர்காள! விருத்தாப்பி தசையையுடைய மூதாட்டியாகிய அடியேனால் உசாவப்படும் ஆட்சேபங்கட்குத் தகுதியான விடையிறுக்குதிரெனச் சாற்றி, தனது சுட்டுவிரலையும் பெருவிரலையும், சேர்த்துக் காட்டியும், ஐந்து விரலையும் ஒருசேர மடக்கிப் பொதிந்து பிடித்தும், ஐந்து விரல்களையும் வட்டாகாரமாகக் குவித்தும் நான்கு விரல்களையும் மடக்கிச் சுட்டு விரலை மாத்திரம் நிமிர்த்தியும், ஐந்து விரல்களையும் விரித்துக் காட்டியுஞ் சைகினை செய்து, இக் குறிப்புகளின் கருத்தை அடக்கி ஒரு வெண்பாவால் விளக்கிக் காட்டுக என்றனர். அவர்கள் ஔவையாரது உள்ளக் குறிப்பை யுணராது ஏதோ சிற்றின்பத் துறையில் குறிப்புக் காட்டினாளென உன்னி; குவித்த குடங்கையையொத்த கண்ணையுடையாளும், பிடிக்குள் அடங்கிய இடையை யுடையாளும், பந்துபோல குவிந்த தனங்களையுடையாளும, சுட்டுவிரலுக்குள்ளே மறையக்கூடிய சிறுத்த யாக்கையுடையளுமாகிய எனது பெண்ணானவள், உன்மீது கொண்ட மோகத்தினால், இன்பத்தையுதவுகின்ற இரதி காதலனது பஞ்சபாணங்களினால் வருந்துகின்றாள் என்னுங்கருத்தையடக்கி,

"இவ்வளவு கண்ணுடைய ளிவ்வளவு சிற்றிடையாள், இவ்வளவு போன்ற விளமுலையாள்—இவ்வளவாய், வந்த வுடலா னலமேவு மன்மதன்கை, ஐந்துகணை யால்வாடி னாள்."

என்னும் வெண்பாவைப் பாடினார்கள். அதைச் செவியுற்ற ஔவையார், இகழ்ச்சிக் குறிதோன்ற மந்தகாசஞ் செய்து, கலைவல்லீர்! ஒருவர் பொறிக்கும் ஆசங்கைகட்கு விடையளிக்குங்கால், கேட்போரது உள்ளக் கிடக்கையையும், அன்னார்க்கு அமைந்துள்ள பருவநிலைகளையும் மட்டிட்டொருங்குணர்ந்து உத்தரங் கூறுதல் மேலோர் கடன். நீவிர் அஃதின்றி "விருத்தனை நோக்கி வேனில்வேள்" என்ற விவேகியைமான," நரை மூதாட்டியாகிய எனது கேள்விகட்கு, காமப்பிரதேறி அலமரும் இளமடவாருக்குரைக்கும் விடையளித்தல் மரபன்று என நிராகரித்தனர். அவ்வார்த்தையைக் கேட்ட சங்கப் புலவர்கள் பெரிதும் நாணமுற்று ஓ ஔவை! நீ காட்டிய குறியிடுகட்கு நாங்கள் கொண்ட கருத்து உசிதமன்றென மறுத்து ஏளனஞ் செய்தனை! இதனினும் பார்க்க விசிட்டமுடைய பொருளுளவாயின், அதனை யொரு வெண்பாவால் விளக்கி காட்டுதி யென்றனர். உடனே ஔவையார் சென்னி தூளக்கி, கோதிலா முத்தமிழாகிய மும்மதங்களையும் பிலிற்றுங் குஞ்சரங்காள்! தாராகணங்கட்கு முன்னே மின்மினி ஒளிகாலுமா? தாங்கள் கூறும் வண்ணம் உத்தரவளித்தமையால் கூறுவேனெனப் புகன்று, உவரியுடுத்த உலகத்தீரே! எந்நாளும் பிச்சையிடுங்கள்; தரும வழியை உறுதியாகப் பிடியுங்கள்; நீவிர் உணவயிலும் போது யாசகருக்கு ஒருபிடி அன்னமாவது கொடுத்து உண்ணுங்கள். உலகில் வசிக்கும் ஒவ்வொரு சமயிகளும், தத்தம் சமயக் கடவுளே மெய்யான கடவுளென வாதித்து வலியுறுதலினிறுவும், கடவுளரெவரும் ஒருவரே யென்று தெளியுங்கள்; இவைபோன்ற உத்தம நெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகுவீராயின், உலகளைப் பந்தித்திருக்கும் பஞ்ச மலங்களும் வலிகுன்றி அழியும்" என்னுங் கருத்தை யமைத்து,

"ஐய மிடுமி னறநெறியைக் கைப்பிடிமின்!
இவ்வளவே னுமன்ன மிட்டுண்மின்-நெவ்வம்
ஒருவனே யென்று உணரவல் லீரேல்
அருவினைகளைந்து மறும்.

என்னும் வெண்பாவைப் பாடியருளினார். அதனைக் கேட்ட சங்கப் புலவர்கள் ஔவையாரது கவியுணர்வையும் ஆற்றலையும், மதிநுட்பத்தையும் வியந்து, நாணமிகுதியினால் பின்னரும் ஆட்சேபர் தொடுக்க நாவெழாது, சென்னி தாழ்த்தி வாளாவிருந்தனர். (தொடரும்)

பொதுச்சாமாச்சாரம்.

—:0:—

சுப்பிரீங்கோடு.

யாழ்ப்பாணம் சுப்பிரீங்கோட்டு இம்மாதம் 22-ந் திகதி விசாரணை தொடங்குமென அரசாட்சி அறிவித்தல் தெரிவிக்கின்றது.

T. R. நல்லையா.

சட்டநிருபண சபையின் வடமாகாணத் தென்பகுதி ஸ்தானத்திற்கு அபேட்சகர்களாக நிற்கும் மூவரில் ஒருவரான அத்துவக்காத் ஸ்ரீ T. R. நல்லையா அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள அநேக பிரபுக்களின கேள்விப்படி தாம் அபேட்சகராய் நில்லாது விட்டனரென அறியக்கிடக்கின்றது.

கிராமச்சங்கத்தெரிவு.

வலிகாமம் வடக்கைச் சேர்ந்த மல்லாகக் கோவிற் பற்றிற்கு பிறக்ஸர் ஸ்ரீ A. அப்பாத்துரை அவர்களும் தெல்லிப்பழைக் கோவிற்பற்றிற்கு ஸ்ரீ S சங்கரப்பிள்ளை அவர்களும் மயிலிட்டிக் கோவிற்பற்றிற்கு ஸ்ரீ S. சுவாமிநாதன் B A அவர்களும் கிராமச்சங்கத் தலைவர்களாக அவ்வப்பகுதி கமிற்றிமார் தெரிவு செய்தனர் இவர்களனைவரும் புதிதாய் நியமனம் பெற்றனர்.

வித்தியாகர்த்தரின் அறிக்கை.

கோப்பாய் ஆசிரியகலாசாலையில் இம்முறை பிரவேசப் பரீட்சைக்குப் போன மாணவர்களுக்கு வித்தியாகர்த்தர் விடுத்த அறிவித்தலாவது:—

"இக்கலாசாலையில் இனிவருங்காலத்தில் சாதி சமயவேற்றுமையின்றி ஒருகுலமாக இருக்கல் வேண்டும் இதனைக் கவனித்தே இப்பிரவேசபரீட்சையிற் தோற்றுக" என்பதாம் இவ்வறிக்கையைக் குறித்து நமமூர்பெரியார்களும பத்திரிகைகளும விசனப்படுகின்றன

நீ பற்றியமை.

சென்றசனிக்கிழமைஇரவு வலிகாமமவடக்கு மணியகாரன் ஸ்ரீ முத்துக்குமாரு முதலியார் அவர்களுடைய மருதனார்மடத்து வீடுகந்தோர் மோட்டாவண்டி முதலிய சகலதும அடியோடு தீக்கிரையாயின முதலியார் அவர்களுக்கும கைகளில தீயினால் ஊறு உண்டாயிருக்கிறதென்றும தீபற்றிக்கொண்ட காரணம நன்கு புலப்படவில்லையென்றும பொலிசார் இது விஷயமாக விசாரணை செய்கின்றனர் என்றும அறியலானோம

புதிய ஆகாயவிமானம்.

ஜெர்மனியில் புதிய ஆகாயவிமானமொன்று செய்யப்பட்டிருக்கிறது அதன் பெயர் டகஸ் அதில் மூன்று தட்டுகள் இருக்கின்றன அத்தட்டுகளில் சுமார் 100 பிரயாணிகள் வரையில இருக்கக்கூடியன. இவ்விமானம 525 குதிரைப் பலருள்ளபன்னிரண்டு என்சின்களால் ஓட்டப் பெறுகின்றது. அடித்தட்டில் பெட்ரோல் வைத்துக்கொள்ளவும மத்தியில்சனங்கள் இருக்கவும மேல்தட்டில் என்சின்கள் முதலிய இருக்கவும ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றனவாம

ஐந்து கத்தோலிக்கர் கைவரானார்.

சென்ற மாதம் 23-ந் திகதி மச்சிபட்டணத்தைச் சார்ந்த காரணையா கிராமத்திலுள்ள பில்வார் வகுப்பைசேர்ந்த ஐவர் ஆரியசமாசத்தின் தீக்ஷா கிரமப்படி சுத்திசெய்யப்பட்டு சைவமதத்தைத் தழுவினர் இவர்கள் பன்னிரண்டு ஆண்டுகளுக்குமுன்னர் ரோமான் கத்தோலிக்க மதத்தைத் தழுவினவராவர் சுத்திக் கிரியை முடிந்தவுடன் மீட்கப்பட்ட சனங்கள் சொற்ப தொகைப்பணம சமாசத்திற் குபசரித்தனர் விருந்துக் கொண்டாட்டமும நடந்தது

விநோத செய்திகள்.

ஜெர்மனியைச் சேர்ந்த பாட்ஸ்டாமில் வெய்ஸ்லீக என்ற ஜோசியர் ஒருவர் இருக்கிறாராம். அவர் தேவுக்களுடனும் பேசும் சக்தி வாய்ந்தவராம். அவர் தற்பொழுது கூறுவது இங்கிலாந்து விரைவில் கடலில் முழுகிவிடுமென்பதேயாம். இது உண்மையானால் இந்தியர்கள் சுயராஜ்யப் போராட்டத்தை நிறுத்திவிடுவார்களென்பதோ.

* * *

இராவணன் ஆண்ட இலங்கை இப்பொழுதுள்ள இலங்கையல்ல வென்றும் அது இராவணன் இலங்கையின் ஒரு பகுதியாகத்தான் இருக்கலாமென்றும், சில ஆராய்ச்சிக்காரர்கள் கருதுகிறார்கள். பழைய இலங்கை தட்சண துருவம் வரை பரவியிருந்ததென்று ராய்பகதூர் கேதாராதர் செர்சலேட்பத்திரிகையில் எழுதுகிறார். இப்பொழுது ஆபிரிக்காவை யொட்டியிருக்கும் மடகாஸ்கர் பழைய இலங்கையின் ஒரு பகுதி என்று அவர்கூறுகிறார். இதுபற்றி ஆராய்ச்சி செய்யுமாறு ஒரு கூட்டத்தார் சமீபத்தில் மடகாஸ்காருக்குப் போகிறார்களாம்.

* * *

சில தினங்களுக்கு முன் 17000டன் நிறையுள்ள புதிய கார்கேக்கப்பலான "ஸ்ட்அமெரிக்கனெ" கொழும்புக்கருகே நடுக்கடலில் சிறிது நேரம நிறுத்தப் பட்டது. கப்பலில் வளர்க்கப்பட்டு வந்த ஓலாப்வீட் என்ற பூனை சமுத்திரத்தில் விழுந்து விட்டதால் அதை எடுப்பதற்காகவே கப்பல்நிறுத்தப்பட்டது. கப்பல் பிரதம உத்தியோகத்தரும் வேறு ஆறுபேரும் ஓரிடத்தில் இரவுப் பூனையை யெடுத்துக் காப்பாற்றினராம். சந்தாக்களில் மோட்டார்கள் ஓட்டும் போது எதிரே வரும் சிவ பிராணிகளைக் கவனியாது பழிவாங்கும் சிவகாருண்ய மூர்த்திகள் பெருகி வரும் இக்காலத்தில் ஒரு பூனைக்காகக் கப்பல் நிறுத்தப்பட்டது விந்தையாகும் என்று தேசபக்தன் கூறுகிறது,

டில்லிப் பகுதியில் ஒரு தகப்பன் இன்னும் இருவருடன் சேர்ந்து கலியாணமான தனது மகளைக் கணவனில்லாத வேளை அழைத்து வந்து டில்லியிலுள்ள ஒரு வியாபாரிக்கு அவள் ஒரு விதவை யென்றுகூறி முந்நூறு 300ரூபாய்க்கு விற்றுவிட்டான். இதுபற்றி வழக்கு ஏற்பட்டதில் பெண்ணைக் கணவன் வீட்டிலிருந்து வஞ்சித்துக் கொணர்ந்த குற்றத்திற்காக தகப்பனுக்கு நாலுவருஷம் கடுங்காவல் தண்டனை யடைந்தான். அவளை விற்ற குற்றப் பணம் விசாரணையில் இருக்கிறதாம.

உண்மையை உணரவேண்டியது மக்களின் கடமை.

(முற்றொடர்.)

கிறிஸ்துவின அடியார்கள் பக்திநிறைந்த தமது வைராக்கியத்தினாலும பக்தியின பெருக்காலும பல அதிசயமான செயல்கள் செய்தனர். சுருங்கக் கூறுமிடத்து கிறிஸ்துவத் துறவிகளின் சரித்திரங்களை நோக்குமபோது, அமமதத்தைக் கைப்பற்றின ஞானிகள் பலர் இருந்தனரென்பது பெறபடுகின்றது இக்காலத்துங்கூட கிறிஸ்துவின்சரித்திரங்களை வாசிப்பவருக்கு கிறிஸ்துவைப்போலவே உயரிய எண்ணமும, சீ யவாழ்க்கையும் நிறைந்து, பரோபகாரமே உருவெடுத்தது போன்று வாழவேண்டுமெனனும் அவா தோன்றுவது இயல்பு. மேற்கூறிய கிறிஸதவ தொண்டர்களின வாழ்க்கையும, நம பெரியார் வாழ்க்கையும பெரும்பாலும் ஒருமாதிரியாகவே இருக்கின்றதெனலாம் ஆயினும இத்தலைகயரின தொண்டு இக்காலத்திலே மேல்நாடுகளிலே மிகவும் அருகிவிட்டது தற்கால கிறிஸ்தவமதம சுமார் ஐயாயிரம வருஷங்களாக வலி குன்றிவருகின்றது. காரணம மதபோதகர்களின் அறியாமையும கிறிஸ்துவின போதனைக்கும இக்கால வாழ்விற்கும் பொருத்த மிலலாமையும, மக்களை ஆத்மலாபத்தைவிடத் தனலாபத்தையே நாடுவதுமாம. இத்தத்தனலாபத்தை நாடுவதற்கு பல காரணங்கள உள. பொருள் தேடுவதற்குப் பல புதிய வழி ஏற்பட்டுள்ளன எனபதை நாம கவனிக்க வேண்டும இவ்வழிகளெல்லாம பல சாஸ்திர விற்பனனர்கள பூகத்துவ ரசாயன விஷயங்களில் ஆராய்ச்சிசெயவதால்மென் மேலும பெருகுகின்றன. சாஸ்திரஞானிகளில சிலர் நாம முன்னோர் அறிந்திராத பல புதுவிஷயங்களைக் கண்டுபிடித்தமையால இறுமாப்புகொண்டு எல்லாவற்றிற்கும் காரணம் கண்டுபிடிக்க முடியுமென்றும் உலத்திலுளள எல்லாப பொருள்களையும் தாமே உண்டுபண்ண முடியுமெனவும் தீர்மானித்துவிட்டனர். இதனால தமமைக் கிறிஸ்தவர்களென வெளியிற கூறி கடவுளை நமபுவதாகப் பாவிப்பவர்கள்கூட பனதிற்குள தமமை நிரீச்சுரவாதிகளெனவே எணணுகின்றனர்.

கிறக, ஆஸ்திகர்களுக்கு ஈசுவரன் ஒருவன் உளன என்னும உண்மை மெனமேலும புலப்பட்டு வருகின்றது. சிறுபானமையருக்குக் கடவுள் ஒருவர் உண்டோ எனற ஐயமும அதனைத் தீர்க்க இடைவிடாது ஆராய்ச்சியும ஆலோசனையும் தோனறுகின்றது எல்லாம வல்ல முழுமுதற் கடவுள் ஒருவர் உண்டெனமேனாட்டார் நமபினும நம்பாவிடினும உடலமனிதனனறு. மனம் மனிதனனறு எனனும உண்மையையும மனிதனுடைய வாழ்க்கை ஒரு பிறப்புடன் நிறபதில்லை. பல பிறப்புகளுக்கு இடமாயிருக்கின்றது எனனும் முடிவையும மேனாட்டு சாஸ்திர விற்பனனர்கள இப்போது அங்கீகரிக்கின்றனர்.

ஆனால் மனத்தின்சக்தி எவ்வாறானது? அஃது ஒருவன இறந்த பிறகு என்னவாகின்றது? ஸ்தூல சரீரம அழிந்த பின்பு சூக்ஷமசரீரம உண்டா என எழும் பல கேளவிகளுக்கு கட்புலனாகக் கூடிய மனத்தினாலெடக்கூடிய வண்ணமாக ஆங்கிலேயர் களும் அமெரிக்கர் களும் விடை கேட்கின்றனர். இன்னும் இதற்கெனப் பல பிரமுகர்கள்சேர்ந்து ஆராய்ச்சி சங்கங்கள் ஏற்படுத்தி அவைகளின் மூலமாய்ப் பலவிஷயங்களைக் கண்டுபிடித்திருக்கின்றனர். நம் நாட்டிலே பிசாசரூபம முதலியவற்றை உண்மையென நம்புவது வழக்கம். ஆனால் அவைகளை மேனாட்டார் இப்போதுதான் நம்புகின்றனர் என்று சொல்லும போது ஆத்ம ஞானவிஷயங்களில் அவர்கள் அதிபாலயதசையிலேயே இருக்கினறார்களெனத் தீர்மானிக்க வேண்டியிருக்கின்றது மேனாட்டிலே இறந்தவர்கள் உயிருள்ளவர்களின் மீது ஆவேசமாக வந்து தாம் வாழும் உலகங்களைப் பற்றிக் கூறுகின்றனராம் தம்மைச் சார்ந்த பந்துமித்திரர்களுக்குத் தாக புத்திமதி கூறுகின்றனராம் புகைப்படமெடுக்க அவற்றிலே இறந்தவர்களுடைய உருவங்கள் தோன்றுகின்றனவாம. மேற் கூறிய விஷயங்களில் பெரும் பான்மை வெறும் கட்டுக்கதையென்று ஒருசாரார் எண்ணுகின்றனர். மற்றொரு சாரார் மேற்கூறியவைகளை கம்பாதவர்கள் பேதைகள் எனக்கருதுகின்றனர்.

வரும் உண்மை விரும்பி.

நாட்டின் சிறப்பு.

முற்காலத்தில் ஔவைத்தமிழ் மூதாட்டியார் சோளமகாராசனை வாழ்த்துங்கலையில் "வரம்புயர" என்னுமபதத்தை உபயோகித்த வகையிலிருந்தும் 'உழுதுண்டு வாழ்பவரே வாழ்வர் பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்னும் ஆன்றோர் மொழிகளிலிருந்தும் உழவுத் தொழிலின் சிறப்பைப் பற்றி அன்னாரின் உன்னதமான அபிப்பிராயம் புலபபடுவதால் மேற்படி தொழிலே தேசமுன்னேற்றத்திற்கு உயிர்நாடி போன்றிருப்பது நாம சொல்லாமலே விளங்கும்.

தற்போது நம்நாட்டுச் சனத்தொகையின்படியே மேனாட்டு நாகரீக நடமாட்டம் பதின் மடங்காக அதிகரித்துக் கொண்டே வருகிறது அதுபோலவே அரை குறைப்படிப்பும் டாம்பீகமான ஏமாற்றங்களும் தீ போலப்பரவி கைத்தொழில்களையும் கமரீகரம் செய்து வருகின்றன. ஏழைக் குடியானவனுமகேடால், பினாங்கு, சிங்கப்பூருக்கு கப்பலேற நான் பார்க்கிறானை அன்றி, கலப்பையைக் கையிலெடுக்க வெக்கமடைகிறான்; அப்படியில்லாத மேல் வகுப்பார்களைக் கவனிக்கப் புகுந்தால், நவீன நாகரீக அரைகுறை உத்தியோகப் படிப்புகளில் உழன்று கொண்டு கைப்பழத்தை கழுவவிட்டு எட்டிப் பழத்துக்கு அண்ணாந்து நின்றகதை போல அவஸ்தைப் படுவதைக் காண்போருக்கு ஒரு புறம் சிரிப்பும், மறுபுறம் துக்கமுமாக இருக்கிறது. தங்கள் தங்கள் தொழில்களையும் துறந்துவிட்டு தம் குடும்பம் வீடு வாசல் பொருள் பண்டங்களையும் கவனியாதுவிட்டுவிட்டு நகரங்களுக்குச்சென்று அரசாங்க சேவகத்தி லிறங்குவதற்குப் படிகளாயுள்ள மேனாட்டு நாகரீகத்தில் மாட்டிக்கொண்டு விளிக்கும் விநோதத்தைக் காணும்பொழுது நெஞ்சம் துடிக்கின்றதே அந்தோ! இவைகளுக்கெல்லாம் காரணங்கள் யாவை? தொழிலாதாவு கொடுக்கும் அதிகாரவர்க்கத்தினர் இங்கில்லாமையே என்பது யாவற்றும் விளங்கும். கலப்பை பிடிக்கும் நிலத்தின் சொந்தக்காரன் என்றைக்கும் சுவாதீனமுடையவன் ஆனால் பேனா பிடிப்பவர்கள் தொழுதுண்டு பின் செல்பவரே மனச்சந்தோஷம் முன்னவரிடத்தில் காணப்படுமேயன்றி பின்னவரிடத்தில் மனச்சஞ்சலந்தான் குடிகொண்டிருக்கும். ஆகையால் சகலவிதமான போகபாக்கியங்களோடு அனேகமாயிரம் ஏழைகளின் கொடும்பசியைப் போக்கக்கூடிய கலப்பைத் தொழிலைப் பின்பற்றுங்கள் இவ்விஷயத்தில் தலையிட்டால் நஷ்டங்கள் வந்துவிடுமா? நீங்களே யோசித்துணருங்கள். ஆனால் மேற்படி தொழில் முறைகழுக்கு ஊக்கமும் பொருளுதவியும் தேவைதான்! மக்கள் எவரும் கூட்டம் கூட்டமாய் வசிக்கும் சுபாவமுடையவர்கள். அதுபோலவே அவர்களுடைய நடை உடைபாவனைகளும் ஒத்தே இருக்கும். மேனாட்டுச் சனங்களைக் கவனித்தால் அவர்கள் யாவரும் ஒரேவிதமான நடை உடை பாவனைகளோடு கூடிய நாகரீக முள்ளவராய் இருத்தலைக் காணலாம். பலதேசத்தவர்கள் கூடும் ஒரு இடத்தில் இவர்களின்னின்ன தேசத்தவர்களென கண்டுகொள்ளலாம். எப்படியான நாகரீகத்தில் மாட்டிக் கொண்டிருப்பினும் பிறர் காணமுடியும் புதுவிதமான ஒரு காரியம் செய்யவாரம்பித்து அதை நல்ல நிலையில் கொண்டுவந்தால் மேற்படி காரியங்களை பின்பற்றுபவர்கள் பலர். இது இயற்கையாக அமைந்திருக்கும் விஷயமே பாருங்கள் தோட்டம் வைத்திருக்கும் ஒரு குடியானவனுக்கு காலையில் எழுந்தவுடன் பசுமையான தன்னுடைய மரம செடிகொடிகளில் அவனுடைய திருஷ்டி பட்டவுடன் அவன் மனோரம்மியமான பூரண சந்தோஷத்தை யடைகிறான். அவனுடைய முகம் ஒருவிதகளங்கமுமில்லாமல் திருப்தியை அறிவிக்கிறது ஒரு உத்தியோகத்தனைக் கவனித்தால் அவன் அன்றையப் பொழுதைத் துலைக்கவேண்டுமே, கல்லபொழுதாய் அன்றையத்தினம் கழியவேண்டுமே என்று நினைக்கிறான். அவனுக்கு கூலிக்குமாரடிக்கும் தொழிலாகையால் முகத்தில் சந்தோஷமும், மனத்திருப்தியும் தென்படுவதிலலை. விதியின்படியே வேலைசெய்வதாகவே ஒவ்வொரு சமயமும் தன்னை நேர்ந்துகொள்ளுகிறான். இவைகளைப்பற்றி அதிகம் கீட்டிப் பேசுவானேன். மக்கள்யாவற்றும் புலப்படவேண்டிய விஷயம்.

பெண்களினிலக்கணம்.

—:0*0:—

சகோதரிகளே!

நம்முடைய தேசமானது பூர்வகால முதற்கொண்டு கற்பிற் சிறந்த பெண்மணிகளால் அருமை பெருமை பெற்று வருகிறது ஆனால் பூர்வகாலத்திருந்த பெண்மணிகளைப் போல இக்காலத்திலுள்ள ஸ்திரீரத்தினங்கள் தங்கள் கடமைகளைச் சரியாய்ச் செய்யவில்லையென்று பெரியோரும் கற்றோரும் மற்றோரும் சொல்லுகிறார்கள் இக்காலத்திலுள்ள சில ஆண் மக்களைப் போல பெண்மக்களும் தங்கள் கடமை இன்னதென்று உணராமல பெரியோரை மதியாமல் சிலர் புருஷன் வார்த்தையைக் கூடக் கேளாமல் தங்கள் மனம்போன போக்கின்படி நடந்து கடைசியில் துன்பப்படுவதை நாம் கண்ணாரக் பார்க்கின்றோம் அந்தோ அது பெரிதும் பரிதாபம் ஆவதும் பெண்களால் தான் அழிவதும் பெண்களால் தான். ஒரு குடித்தனம சீர்பெறுவதும் கெடுவதும் ஸ்திரிகளால் தான் கற்புடைய ஸ்திரிகளால் தான் உலகம் நடைபெறுகின்றது "நெல்லுக்கிறைக்கும் நீர் வாய்க்காலின்வழியிலுள்ளபுல்லுக்கும்" பாய்வது போல் கற்புடைய ஸ்திரிகளுக்காக கடவுளால் கொடுக்கப்படும் நன்மைகள் அவர்களைச் சேர்ந்துள்ள மற்றவர்களுக்கும் கிடைக்கின்றன ஒருபெண்ணானவள் கடவுளை வணங்காமல் இருந்தாலும் அவள் தன் கணவனைக் கடவுளாகப் பாவித்து வந்தால் "பெய்" என்று சொன்னவுடன் "மழை பெய்யும்" என்று உலகமெல்லாம் புகழும் பெருமையையுடைய ஆசிரியர் திருவள்ளுவநாயனார் சொல்லுகிறார். சந்திரமதி தன கணவனோடும் பிள்ளையோடும் அயோத்தியை விட்டுக் காசிக்குச் செல்லும் வழியில் அக்கினி ஆறு குறுக்கிட்டது அதைத் தன கற்பின் மகத்துவத்தால் குளிரும்படி செய்தான் கற்பின் மிக்க சந்திரமதி யல்லவா? திருவள்ளுவ நாயனாரும் "ஒரு ஸ்திரி கற்பை உடையவளானால் அதை விட அவள் பெறவேண்டியது வேறு என்ன இருக்கிறது" என்று சொல்லுகிறார் கற்பை இழந்த ஸ்திரியானவள் தன்னை விலையுயர்ந்த பட்டாடைகளாலும் வைர நகைகளாலும் சிங்காரித்துக் கொண்டு மடமாளிகைகளில் வசித்தாலும் மிருகங்களிலும் கேடுகெட்டவளாவள். பூமாதேவி அவள் பாரத்தைத் தாங்கச் சகியாள்.

ஸ்திரீரத்தினங்களுக்கு இருக்கவேண்டிய இலட்சணங்களுள் முக்கியமான குணங்கள் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, என்பவைகளே.

1 நாணம் என்பது, வெட்கம். அதாவது பெண்கள அந்நிய ஸ்திரீபுருஷரைக் கண்டால் அடங்கி ஒடுங்கி வாய்மூடி மறைந்து நிற்க வேண்டும்.

2. மடம் என்பது, ஸ்திரீ தனக்கு எவ்வளவு விஷயங்கள் தெரிந்திருந்தாலும் அவைகளை வெளிக்குக் காட்டாமல் அடங்கி இருக்கவேண்டும.

3 அச்சம் என்பது, ஸ்திரீ தனக்குத் தெரியாத ஒரு புது விஷயத்தைக் கண்ட காலத்து அடங்கி இருக்கவேண்டும்.

4 பயிர்ப்பு என்பது, ஆடவருடைய தேகம் தன்மீதுபடுமாயின் அருவருப்புக்கொள்வதாம். இவ்விதமே பிதா, மாதா, சிறியோர், பெரியோர், தெய்வம், குரு இவர்களுக்குக் கீழ்ப்படிந்து மதாபிமானம், தேசாபிமானம், ஜீவகாருண்யம முதலான நல்லொழுக்கங்களை அனுசரித்து எரிச்சல், பொறாமை, அகங்காரம் முதலான தீய குணங்களையும புதிய நவநாகரீகங்களையும வெறுத்து நமது பெரியோருடைய பொன்போனற வாக்கியங்களையும பிரமாணங்களையும அனுசரித்துயதார்த்தமானவழிகளில் நடந்து வரவேண்டும. பெரியோருடைய சொற்படி ஸ்திரீகள் நடந்துவந்த காலம்வரையில் நமமுடைய நாடு க்ஷேமமாக இருந்தது. இப்பொழுதோ அவர்களுடைய கட்டுப்பாடுகளை மறந்துவிட்டார்கள் இதனால் தாங்களும் கெட்டு மற்றவர்களையும கேடடையச் செய்கின்றனர். இவ்விதம் நடந்துவருகிறதினால் அல்லவோ நம் நாடு வரவரக் கேவலதிசை அடைகின்றது. இம்மட்டோ? தற்காலத்துத் தையலர்கள் கொஞ்சமாகவோ அதிகமாகவோ ஆங்கிலம் கற்றுத தேறிவிட்டால் அந்தோ! அவர்களுடைய கட்டும், மெட்டும், உடையும, நடையும, குடையும், சொருகும, பேச்சும, கைவீச்சும, குலுக்கும, பிலுக்கும, ஜாட்டமும, ஜோட்டமும, செருக்கும, சிரிப்பும, சினைப்பும, ஆடவரோடுறவாட்டமும, கண்பார்வை சரியாய் இருந்தும நாகரீகமென்று கருதி பொன்னால் கட்டப்பட்ட மூக்குக் கண்ணாடிகளையும, கையில் மணிக்கூட்டுக் கடிகாரங்களை அணிந்தும, வாசனைத்திரவியங்களை வேண்டியமட்டும் பூசிக்கொண்டும, கூட்டாளிகளோடு கை கோர்த்துக்கொண்டு வெட்கமல்லாமற் கடற்கரைக்கும, நாடகசாலைகளுக்கும, பல பொது இடங்களுக்கும போகிறார்கள். ஐயோ! இவர்களுடைய அறியாமைக்கு அழுதாலுந் தீராது. இதுமட்டோ. தம தாயப்பாஷையாகிய தமிழ்ப்பாஷையை விட்டு அடுப்பண்டையிலும் ஆங்கிலம் பிதற்றலுமாய் இருக்கின்றனர் என்ன வேடிக்கை, என்ன அட்டகாசம், என்ன கர்வம்,

சகோதரிகளே, உங்களுக்கு ஒன்றுந் தெரியாது என்று நான் இவ்வளவுதூரம் எழுதவரவில்லை நளாயணி, சாவித்திரி, சீதை, அருந்ததி, அனுசூயை, ஆசிரியர் திருவள்ளுவநாயனாரின் மனைவியாகிய வாசுகிதேவியார் முதலிய கற்பரசிகளின் புத்திரிகள் அல்லவா நீங்கள். ஆகையினால் நீங்கள் பிறர் சொல்லாமலே உத்தமவழியில் நடப்பீர்கள் என்பது நிச்சயம். நம்முடைய நாட்டுத் தையலர்கள் கற்பிற் சிறந்தவர்களென்றும், ஒழுக்கத்திற் சிறந்தவர்களென்றும், பதிபக்தியில சிறந்தவர்களென்றும் பெரியோரிடம் மரியாதை யுடையவர்களென்றும எல்லோரும் அறிவார்கள் என்பது உண்மை. (முடிந்தது).

இந்தியப் பிரயாணிகளின் கஷ்டம்.

சென்ற 5உ "றௌவர் ஹால்" எனனும் மண்டபத்தில் கொழும்பிலுள்ள சகல இந்தியச் சாதியாருடு ஒருங்கு கூடி பின்வரும் மூன்று தீர்மானங்களை நிறைவேற்றினர்:—

1. மண்டப வழியாலும், தூத்துக்குடி வழியாலும் பிரயாணஞ் செய்யும் இந்தியப் பிரயாணிகளுக்கு அவ்வவ்விடங்களிலுள்ள வைத்திய அதிகாரத்தவர்கள் செய்யும் இம்சையான நடப்பை இக்கூட்டம் கண்டிக்கின்றது.

2. இந்தியப் பிரயாணிகளுக்காக வேண்டிய வசதிகளமைத்தற்கும், வைத்திய அதிகாரத்தவருக்கு உதவி புரியவும், ஒரு நிலைதரமான ஆலோசனைச் சங்கத்தை அரசினர் நிறுவ வேண்டுமென்று கேட்கின்றது.

3. மேற்குறித்த தீர் மானங்களை, இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள குறித்த உத்தியோகத்தர்களுக்கு அனுப்பும்படியாகவும் கற்பிக்கின்றது. இ. சா.

மாகர் வகுப்பாரின் சமத்துவ வெற்றி.

பேரார் மகாணத்தைச் சேர்ந்த ஜமோத்ஜில்லாவிலிருக்கும் ஜலகானில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மாகர் வகுப்பார் 'தீண்டாதார் எனப்படுவோர்' தங்களுக்கும் மற்றவகுப்பாரைப்போல் அங்குள்ள கிணறுகளில் தண்ணீர் எடுக்கவும் ஆலயத்திற்குட்சென்று கடவுளை வழிபடவும் உரிமை அளிக்கப்பட்டு, தங்களைச் சமுதாய விஷயங்களில் மற்ற உயர்ந்த வகுப்பாரோடு தங்களைச் சமமாக நடத்தாவிடில் தாங்கள் முஸ்லீம் களாகவோ அல்லது கிறிஸ்தவர்களாகவோ மதம் மாறக் கண்டிப்பாய்த் தீர்மானித்திருப்பதாய் உயர்ந்த வகுப்பார் எனப்படுவோருக்கு இறுதியான எச்சரிக்கை செய்தனர். அம்மாகாணம் முழுதும் பரபரப்புண்டாகி உயர்ந்த வகுப்பாரும் வணங்கிக் கொடுக்கத்தக்க நிலைமையுமேற்பட்டது. மாகர் வகுப்பினர் ஒற்றுமையாக மதம்மாறுவதாய் இத்தகைய இறுதியான எச்சரிக்கை செய்திருப்பதைச் சாதகமாகக்கொண்டு தீண்டப்படாதாரை மதம் மாற்றும் நோக்கத்துடன் முஸ்லிம் மௌல்விகளும், கிறிஸ்தவப் பாதிரிகளுங் கூட்டங் கூட்டமாக அங்கு வந்து சேர்ந்து விட்டார்கள். இதற்குள் சுமார் பத்துப்பன்னிரண்டு மாகர் வகுப்பைச் சேர்ந்தோர் தாங்கள் எச்சரித்துப் பயமுறுத்தியபடியே இஸ்லாம் மதத்தைத் தழுவி முஸ்லீம்களாகிவிட்டார்கள். இதனால் இங்குள்ள இந்துக்கள் கண்விழித்துக்கொண்டு இரண்டு கிணறுகளில் தீண்டாதாரும் தண்ணீர் எடுத்துக்கொள்ள அனுமதித்ததோடு மாகர் வகுப்பாரை அழைத்து உயர்ந்த வகுப்புகளெனப்படும் பல வகுப்புகளின் தலைவர்களின் வீடுகளில் உட்காரவைத்துத் தீண்டாதாரெனப்படும் அவர்களுடன் தாம்பூலங்களும் மாற்றிக்கொண்டனர். இத்தகைய சமத்துவ உரிமைகள் வழங்கப்பட்டுப் பொதுக்கிணறுகளில் தண்ணீர் எடுக்கவும் ஆலய உற்சவங்களில் கலந்து ஆலயப்பிரவேச உரிமையும் அளிக்கப்பட்டதுடன் தாங்கள் மதம்மாறுவதைவிடுத்து இனி அந்த எண்ணத்தையே மறந்து விடுவதாயும் உறுதி கூறியிருக்கிறார்கள் இந்தியாவின் மற்றைப் பாகங்களிலுள்ள இந்துக்களும் ஜலகான் இந்துக்களின் உத்தமமான உதாரணத்தைப் பின்பற்றி நீதிவழங்க முற்பட்டுத் தீண்டப்படாதார் என்னும் ஏழைமக்களின் கேர்மையான குறைகளை ஒழிப்பார்களா? என்று கல்கத்தா லிபர்ட்டிப் பத்திரிகை கேட்கிறது.

மக்கட்பிறவியின் அருமையும் உடம்பின் பெருமையும்.

(முற்றொடர்.)

மக்களின் உடம்புக்கும் சந்திரனுக்கும் சம்பந்தமான இரகசியங்கள் பெரும்பாலு மிருக்கின்றன.

சந்திரன் மாதந்தோறும் குறைவதனாலும் வளர்வதனாலும் மக்கள் உடம்பிலும் சில மாறுதல்கள் ஏற்படுகின்றன. பூரண சந்திரோதய காலத்தில் கடலானது பெருகுகின்றது. உவர் நிலங்களில் உப்புப் பூத்து வடிகின்றது; சந்திரனின் சக்தியானது மாந்தரேடிகளிலும் பாவி மாறுதல்களை யுண்டுபண்ணுகின்றது. உதாரணமாக நிலாவெளிச்சமிருக்கிற நாட்களில் தூண் முதலியவைக்காக மரம் இவைகளை வெட்டினால் அவைகள் சீக்கிரம் உருத்துக் கெட்டுவிடுமென்றும் அமாவாசைக் தமுள் இருட்டாயிருக்கிற ஐந்து நாட்களிலும் மரம் முதலியவைகளை வெட்டினால் அவைகள் கெட்டுப்போகாமல் வெகு நாள்வரையில் பாவிக்கலாமென்றும், இவ்வாறு சந்திரனுடைய சக்தியானது மரம் ரேடிகளில் பரவுவதுபோல் மக்கள் உடம்பிலும் புகுந்து அநேக இரகசியச் செய்கைகளை உண்டுபண்ணுகிறது. சந்திரன் பூரணையிலிருந்து 16 நாடகளுக்குள்ளே தேய்ந்து அமாவாசையாகின்றது. அமாவாசையிலிருந்து 16 நாட்களுக்குள் வளர்ந்து பௌர்ணமியாகின்றது. வளர் பிறைக்காலத்தில் உடம்பில் மனோபலமும் ஒருவித அழகு சக்தியும் உண்டாகின்றன. தேய்பிறைக் காலத்தில் உடம்பில் அழகுசக்தி குறைகின்றது. வளர்பிறை காலத்தில் ஒரு நல்ல சுபகாரியத்தைச் செய்யத்தொடங்குவார்கள். தேய்பிறையில் தொடங்கமாட்டார்கள்; மூலிகைகளையெல்லாம் வளர்பிறையில் பிடுங்கினால் தான் மருந்து சித்திக்கும். தேய்பிறைக் காலத்தில் மருந்து சாப்பிட்டால் நோயாளியின் வியாதி சீக்கிரமாகக் குணமாகும். இன்னும் அமாவாசை பௌர்ணமி, ஏகாதசி, முதலிய நாட்களில் சந்திரனுடைய சக்தியினால் உடம்பில் கூடும் குளிர்ச்சியும் மாறுபடுகின்றன. இதுபற்றியே மேற்படி நாட்களில் ஒருவேளை உணவு மாத்திரம் உண்டு விரதமிருப்பார்கள் மேற்படி நாட்களிலே நோயாளிகளுக்கு நோய் அதிகமாவதையும் விஷப்பூச்சி கடித்தவர்களுக்கு உடம்பில்விஷம் அதிகரிப்பதையும் நாம் காணலாம். சந்திரனுக்கும் பெண்கள் உடம்பிற்கும் அதிகமான பொருத்தமிருக்கின்றது. சந்திரனும் அமாவாசை முதல் 16 நாடகளில் வளந்து பூரணமடைகிறது. பெண்களுக்கும் "பூத்து நீராடிய நாள் முதலாகப் பன்னிரு நாள் பூவைமார்க்கு, வாய்த்த சூலுறுங்காலமாகையினால்" என்றபடி பூத்து நீராடிய நான்காவது நாள் முதல் 12-ம் நாட்கள் வரை கருத்தரிக்கும் காலமாம். (வரும்.)

சுதேச வைத்தியன்,
M. P.

கொழும்புநகருள் எனது நுழைவு.

—:O:.—

[திரு. சி. சரவணனூர் வேலணைமேற்குமுகரி]

நீண்ட ஆண்டுகளாக இந்திய நாட்டிலே எழந்த "தீருத்தமுறைகள்" பல அவற்றுள் தலைசிறந்த திருத்தப்பாடென இந்திய நாட்டறிஞர்களால் இன்று கையோம்பிவரும், "தீண்டாமை நீக்கம்" இருக்கின்றதே. அஃதோடு இந்தியநாடு முனைந்து முனைந்து தீண்டாமை நீக்கப்போர் நிகழ்த்தியும், என்னே? பலன் விழைந்தது. "ஒன்றுபட்டுண்ணல்" என்னும் அன்பு சார்ந்த தெய்வீக ஒருமைப்பாடு இருக்கின்றதே இத்துறையில் இந்திய நாடு பல்லாண்டு உழைத்தும் நிறைபலன் இன்றும்எய்தினபாடோ? இல்லை??இல்லை??? பின்னை அன்பர்களே?

பொன்னெறிப்பனவிழமேயதன்
முன்னெறிப்பனயாழ்ப்பதியாதலான்.

——— திரு. சி. ச.

ஈழத்தின் முகரிபட்டிலங்கும் யாழ்ப்பாண நாடு இருக்கின்றதே? அதில் சென்றுண்டின், இறுதிக்கடசியில் யாழ்ப்பாண நாட்டு இளமாணவத் தோன்றல்களால் ஒரு போவை, "காங்கேயன்துறை" என்னும் பெரும்பகுதியில் கூட்டுவிக்கப்பெற்றது. ஆண்டு அவ்வவையின் தலைச்தவிசு வீற்றிருக்க மதுரத் தேன் மொழிவள்ளல் திரு. வி. கலியாணசுந்தரப் பெருமானை அழைத்தேற்கப் பெற்றது எனவே, இந்நிகழ்ச்சியில் கருத்நூன்றியானும் மெல்லென காங்கேயன்துறையை நண்ணி அப்போவைப் பெருங்கூட்டத்தின் ஓர் பாங்கரில் என்னை இருக்கைப் படுத்திக் கொண்டேன்.

ஆங்கு நிகழ்ந்தனவற்றை நாடுதாமே யறியுமாகலான் ஈண்டுகுறியாது விடுத்து ஆங்கே நிகழ்ந்த செயற்கரிய பெரு நிகழ்ச்சி யொன்றைக் குறிப்பிடுகின்றேன்.

பெரும்னையொன்றில் சூழ்ந்த மகவுகளுடன் தந்தையும் தாயுமாய் பெருகலத்தில் நிறைவுபட்டிருக்கும் உண்டியை அன்பு மொழிபரவ கலந்துண்ணும் அன்பழாவிய தெய்வச் சேயலைப் போன்று காங்கேயன்துறையின் பக்க முகப்பிலே ஒரு கொட்டகை சமைப்பித்து அதில் நிரைபட அணிவகுத்தாலென்ன இருந்துண்ணற்கு பர்ய் பரப்பி வேண்டும் வேண்டும் உணவுகளெல்லாம் விதம் விதம் அட்டல் செய்து அப்பேரவையினர் சார்பாக உண்ணற்றொழில் நிகழ்ந்தது எவ்வாறு? அன்பர்களே? இந்திய நாட்டார் எல்லா வகுப்பு அன்பர்களும் ஒத்த பண்பினராய் "உடன் உண்ணல்" செய்தற்கு பல்லாண்டாய் முயன்றும் பயன் முற்றும் முற்றவே இல்லை ஆனால் எங்கள் யாழ்ப்பாண நாட்டிலேயே காங்கேயன்துறை அமைந்துளது ஆங்கேயே யான் குறிப்பிடும் உடன் உண்ணல் முற்றும் நிறைவேறி நிறைவெய்தியது எவ்வாறு நிறைவெய்தியது என்பதை அறிவீர்களா? யான் கூறுகிறேன். அவைமீது கருத்துச் செலுத்துவீர்களாக. யாழ்ப்பாண நாட்டிலே எத்தனை எத்தனை வகுப்புகள் உண்டோ அவையாவும் அப்பெருங் கொட்டகையுள்வில் வாய் கலந்ததாமென்பின் பின்னையான் கூற வேண்டுவதென்னை சிறு பொழுது எண்ணிய மாணவர்கள் ஒருநாட்டின் ஊழலை இத்துணை பொழுதிற் கழைவதாயின் மாணவர்களின் கூட்டுறவின் பெற்றிதானென்னே.

யாழ்ப்பாண நாட்டின் பலபாகங்களிலுமுள்ள "கீழ்படு" "மேழ்படு" சாதிமக்களெல்லோரும் ஒருமைப்பட்ட உணவுப்பந்தியில்உடனிருந்து உண்டார்களென்பதைஈண்டு பெருங்கிழ்வுடன் குறிப்பிடு மேற் செல்லுகின்றேன்.

அன்பர்களே! இத்தகைய நிகழ்ச்சியினைக் கண்ணாரக்கண்டு பெருங்கிழ்வு எய்தினேன். பின்னையே யாழப்பாணத் தெங்கலிலிருந்தபடியே அனலார்தியின் வழி கொழும்பை நோக்கிச் சென்றேன். ஆனால் யான் கொழும்பைச்சேர்வதன் முன்னரே எனது வருகையை அறிவிக்கும் காகிதங்கள் எனது நேயர்பால் சென்றடைந்தன. எனவே யான் அமர்ந்து சென்ற அனலார்தி மருதானைப் புகைரதக் கோட்டத்தை அணுகியது. அணுகவே கண்களைமுடிக்கொண்டு நாடுகடந்த மகன் நடுவழியிலேயே தனது கண்களைத் திறந்தால் அவன் முன்னிலை எத்தகை காணாக்காட்சிகளை காணுமோ அவ்வாறேஎனது கண்முன் மருதானைப் புகைரதக்கோட்டங்களும் சூழ்வனவும் தோன்றின. இதனூடே என்து நேயர்களும் தங்கள் உருவங்களைத் தோற்றுவித்தார்கள் வந்த நேயர்களுடன் அழாவியபடியே வண்டியினின்றும் கீழிறங்கி படியிட்டிருக்கும் வரிசை கோணவழிவழியே யானும் நேயர்களுமாய்க் கொழும்பின் முகப்பையடைந்தோம். ஆங்கு பலதிறத்த வூர்திகளெல்லாம் வருவோரை யெதிர்நோக்கயபடியே நிலைத்து நின்றன. ஆனாலோ எனது அன்பர்கள் என்னை [றிச்சோ] ஆள் வண்டியினருகே அழைத்துச் செல்வதைக் கண்டேன். மெல்லெனவாக அவர்களது நோக்கத்தை யறிந்தயான் என் செய்தேன. (தொடரும்.)

வேதாந்த மனோதத்துவபூஷணம்.

நமது நாட்டில் தேசாபிமானம் சமயாபிமானம பத்திரிகாபிமானம் பூண்ட நேயர்கள் பலர் நேரிலும் கடிதமூலமாகவும் கேட்டுக் கொண்டபடியால் நம நாட்டின் முன்னோர்களால் கூறப்பட்ட நூல்களின் அனுசரணையையொட்டி நமக்கெட்டிய வரையில் வேதாந்த மனோதத்துவ பூஷண மென்னும் பெயரிட்டு எழுதத் துணிந்தேன் இதிற்காணும் குறை குறறங்களை நீக்கிக் குணததைக் கைக்கொள்ளுமாறு மன்னிப்பாகக் கேட்கின்றேன்.

வேதாந்தமென்று சொல்லப்படும் நூலானது உண்மையில் இந்தியாவிலிருக்கும் பலமதங்களின் சாரங்களுமடக்கி யிருக்கின்றன. பலவிதமான வியாகியானங்கள ஏற்பட்டிருப்பினும் அவ்வளவும் துவைதத்தில் ஆரம்பித்து வரவர மேல்நோக்கிக் கடைசியில் ஏகாத்துவபாவனையாகிய அதுவைதத்திலே முடிவாகின்றன எனத்தோறறுகின்றது வேதாந்தம் என்னும் பதத்திற்கு வேதங்களின் முடிவென்று பொருளாகும. மேல்நாடுகளில் சிலவேளையில் வேதங்களென்னும் பதத்திறகுக் கர்மகாண்டத்தைச் சேர்ந்த ஸ்தோத்திரம் யக்ஞம் முதலிய விஷயங்களென்று பொருள் கொள்ளுகின்றார்கள. ஆனால் தறகாலம இவ்விஷயங்களெல்லாம் உபயோகத்தின நின்று விலக்கப்பட்டன. இப்போது இந்தியாவில் வேதங்கள் என்றால் வேதாந்தத்தைக் குறிக்கின்றார்கள். வேதாந்த நூல்களுக்குச் சுருதியெனப் பெயர் பெறும. வேதாந்தமென்று சொல்லப்படுகிற பாகங்கள் முழுதும் வேதங்களின் கர்மகாண்டத்திலுள்ள அத்தியாயங்களுக்குப் பின்பு எழுதப்பட்டவைகளல்ல. வேதாந்தமே இந்து சமயத்திற்கு முகிய சாஸ்த்திரமாக யிருக்கின்றன. வைதிக மார்க்கத்தைப் போதிக்கும் நூல்களெல்லாம் வேதாந்தத்தையேஆதாரமாகயிருக்கின்றன பலகாரியங்களுக்கும் வேதாந்தமே ஆதாரமாக வேண்டும்

தற்கால வேதாந்தத்திற்கு வியாசசூத்திரங்களேபிரதானமானவைவியாசசூத்திரங்களுக்குப் பாஷ்யகாரர்கள் அனேகவித வியாகியானங்கள் உண்டாக்கப் பட்டிருக்கின்றன. அப்பாஷ்ய காரர்களை இப்போது மூன்றுவகையாகப் பிரிக்கப் படுகின்றன மூன்றுவிதத்துவங்களும் மூன்றுமதங்களாகின்றன அவை துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம், என்பவைகளாகும அவைகளில் துவைதம் விசிஷ்டாத்வைதம் என்ற இரண்டுமதங்களும் இந்தியாவில் அனேக சனங்கள் பற்றியிருக்கிறார்கள் அத வைதமதத்தைப்பற்றிய சனங்கள மிகவும் சொற்பம் வேதாந்திகளெல்லோரும் மூன்று விஷயங்களை ஒப்புக் கொள்ளுகின்றார்கள அவர்களுக்குக் கடவுளிடம்நம்பிக்கையுண்டு வேதங்கள தெய்வத்தன்மையுடையது.

இதுநிற்க கல்பங்களின் சங்கதியை தற்போது எடுத்துக் கொள்வோம இந்தஉலகத்திலுள்ள ஜடப் பொருள்களெல்லாம ஆகாசம் என்ற பூர்வீக சடப்பொருளிலிருந்து வெளியாகினவை ஆகர்ஷணசக்தி முதல் உலகத்தில் தோற்றக்கூடிய சக்திகளெலலாம் சீவன்கூட பிராண வென்ப ஆதிசக்தியிலிருந்து வெளியாகியவைகள் பிராண வென்ற ஆகாசம் என்ற பொருளிலடங்கியிவ்வுலகத்தைச் சிருஷ்டித்து வருகிறது ஒவ்வொரு கல்பத்தின் ஆரம்பத்திலும் ஆகாசம் அசைவற்று ஒன்றையும் வெளிப்படுத்தாமல் நிற்கிறது அப்போது பிராணவென்னும் சக்தி அந்த வஸ்துவைத் தாகிக்கொண்டேவரவர ஸ்தூலமான பதார்த்தங்கள் அந்த ஆகாசத்தினின்று உண்டாகிவருகிறது அவ்விதமே புல், பூண்டு, மிருகம், மனிதர், நட்சத்திரம் முதலியவைகளுண்டாகின்றன வெளிப்பட்டசக்தி நாட்செல்ல முடிவடைந்து ஒன்றனுள் ஒன்றை யடக்கும் சக்தியுண்டாகிறது கடினமான பதார்த்தமெல்லாம் வரவர நுட்பமான பொருளாகமாறிக் கடைசியில் உலகத்திலுள்ள சடபபொருள்களெல்லாம் ஆகாசத்திலும் சக்தி பிராண வென்றதிலும் அடங்கியிருக்கின்றன பின்பு மற்றொருகல்பம் இதே மாதிரியுண்டாகிறது ஆகாசம், பிராண வென்ற இரண்டிற்கும் மேலான வஸ்து ஒன்றிருக்கிறது இவ்விரண்டையும் மகத் எனச் சொல்லப்படும் மூன்றாவது பொருளாகமாற்ற முடியும் மகத் என்றால் இந்த உலகத்திலுள்ள மனதுகளின் மொத்தத் தொகுதியென்று சொல்லப்படும் இம் மகத்தானது ஆகாசமென்னும் பொருளாகவும் பிராண சக்தியாகவும் மாறுகிறதேயன்றி இவைகளைப் புதிதாக உண்டாகவில்லை

மனஸ் ஆன்மா கடவுள் என்ற இம்மூன்றினிடமுள்ள நம்பிக்கையைச் சிறிது கவனிப்போம் எல்லோருஸ்சம்மதித்திருக்கிற சாக்கிய மனோதத்துவ சாஸ்திரம் நமமிடத்திலுண்டாகக்கூடிய உணர்ச்சிகளைப்பற்றியும் கவனிப்போம் பார்வை யென்றதை எடுத்துக் கொண்டோமானால், முதற் பார்ப்பதற்குக் கண்களிருக்கின்றன இவ்வெளிக் கண்களுக்குப் பின்னால் பாகரும இந்திரிய மமையப்பட்டிருக்கிறது இவ்வுந்திரியம வெளிக் கண்களலல. ஆனால வெளிக்கண்கள் உதவியில்லாமல் பார்க்க முடியாது. பார்வை என்ற எண்ணத்தை உண்டாகுவதற்கு இவ்வளவும் போதாது, மனஸ் என்பது இந்திரியத்துடன் சேரவேண்டும; எண்ணமானது புத்தியிடம் செல்லவேண்டும. தீர்மானிக்கும சக்தியே புத்தியாகும்; அப்புத்தியினின்றுண்டாகும் பொருளே தோற்றம். அதன் பின்புதான் நான் பார்க்கிறேன் என்ற அகமுண்டாகிறது மனதிலுதிக்கும் எண்ணமெல்லாம இச்சரீரம் மனஸ் என்ற இரண்டு நித்தியமான பொருளிடம் ஒன்றுசேர்ந்து அடையாள மேற்படும. ஆகவே, ஆத்மன் எனறும புருஷன் என்றும பெயர் பெறும். (வரும்)

S N. சர்மா,
சித்தவகேணி.

அறிவித்தல்.

சென்றுபோன இருமாசங்களிலும திராவிடன் பத்திரிகைச சந்தாப்பணம அறவிட்டு வந்த அ முடியப்பன் என்னும பையனை மேற்படி வேலையினின்றும நிறுத்தியிருக்கின்றோம ஆகையால அப்பையனிடத்தில ஒருவரும பணம கொடுக்கப்படாதென்பதை யாவருக்கும தெரிவிக்கின்றோம.

விசேஷ அறிவிப்பு.

பியானோ, வில்லியுளுட், பிடில், ஹார்மோனியம், கிறுமபோன் முதலிய சகல வாதியங்களும் கடிகாரங்களும திருத்திக் கொடுக்கப்படும மேற்கூறிய கருவிகளுக்குத் தேவையான எந்தச சாமான்களும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

கே. எஸ். இரத்தினம்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

ஓறியன்றல் ஸ்ரோர்ஸ்.

பெரியதெரு, யாழ்ப்பாணம்.

எங்களுடைய இதரவியாபாரங்களுடன், பலபேர் வேண்டுகோளின்படி வீட்டிறகு வேண்டிய கதிரைகள், கட்டிலகள் மேசைகள், அலுமாரிகள, பொதுவாக வீட்டிறகு வேண்டிய எல்லாவித மரசசாமான்களும், எங்களுடைய மாதிரி களைக் கொண்டு திறமான தச்சர்களால கொழும்பில் செய்வித்து யாவரும் விரும்பும்படியாயம வாகரும வாங்குவதற்கேற்ற விலைகளில் விற்கின்றோம. ஒருமுச ற வந்தபாருங்கள்.

வ அ. துரையப்பா,
சொந்தக்காரர்.

யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ்.

(பொன்னுச்சாமி ஷாப்)

பெரியதெரு, யாழ்ப்பாணம்.

பட்டினததிற்குச சாமான் வாங்க வந்தால் பிற கடைகளின விலைகளை அறிந்திருந்தாலும, எங்கள் ஷாப்பின் விலைகளையும் சாமான்களையும ஒத்துப்பார்த்து வாங்கவும.

பலவிதமான வேஷ்டிகள் சால்வைகள் ஷர்ட்சீலைகள் மற்றமுள்ள எல்லா ஷாப்புச் சாமானகளும் நேரிலும பிரத்தியேகமான ஏஜண்டுகள் மூலமாகவும வரவழைத்து விற்கின்றோம

டாக்குத்தர்களால் குறிக்கப்பட்ட எலலாவித மருந்துவகைகளும, எங்கள் மருந்து ஷாப்புப் பிரிவில, றஜிஸ்ட்ரேசிப்பத்திரமபெற்ற ஆட்களைக் கொண்டு, விலைசரசமாயும சுணக்கமின்றியும தயாரித்துக் கொடுக்கப்படும எலலாப் பேட்டன்ட் மருந்துகளும கிடைக்கும.

Dr S Ponnusamy,
Proprietor & Manager.

விளம்பரம்.

கட்டிட வேலைப்பகுதிக்குரிய சுண்ணாம்பு தேவைக்கு எவ்வளவு எனினிடத்தில் எடுக்கலாம சுண்ணாம்பு நல்லதும வெண்மைநிறமுடையதும கலலில்லாததுமான ஒரு வாஸ்தர் சுண்ணாம்பு ரூபா 20/- தொகையாயினும் என்னிடத்தில பெறறுக கொள்ளலாம.

மா. கந்தப்பிள்ளை
மாகையப்பிட்டி.

தனலட்சுமி புத்தகசாலை.

அன்பார்ந்த வித்தியாபிமானிகளுக்கு அறிவிப்பது:—

ஷை புத்தகசாலையில் சகலவிதமான பள்ளிக்கூடப புத்தகங்களும, பள்ளிக்கூடங்களுக்கு வேண்டும மற்றஞ் சகலசாமான்களும், 'யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திசங்க" பரீட்சைகுரிய புத்தகங்களும், ஆசிரியர் பிரவேச பரீட்சை, இரண்டாம் மூன்றாம் தாராதரப் பத்திரம பெறுவோர்க்குரிய புத்தகங்களும இதர நூல்களும கிடைக்கும. வேண்டியவர்கள் நேரிலும வீ பீ. மூலமாயும் பெற்றுக் கொள்ளலாம.

ஆசிரியர்களுக்குத் தக்க கழிவு கொடுக்கப்படும.

தனலட்சுமி புத்தகசாலை,
சுன்னாகம்.

Published by V. M. Kandiah for and on behalf of the Jaffna Depressed Classes Association Chunnagam & printed at the Saiva Prakasa Press, Vannarpannai.

V. M. Kandiah
Chunnagam